'ரூ.5 கோடி லஞ்சம்' புகழ்

ராஜ்மோகன் விளக்கம் கொடுப்பாரா?

பெரியார் அறிவுலகம் சில கேள்விகள்.

நூலக புத்தக கொள்முதலில் ஊழல் என்று செய்திகள் வெளியாகி வருகின்றன.

கடந்த ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டது என்று மட்டும் சொல்லும் அமைச்சர் ராஜ்மோகன் புத்தக கொள்முதல் செய்த தேதியை மட்டும் மறைப்பது ஏன்?

குற்றசாட்டுக்கு உள்ளான அகல்வி எக்கு புத்தகத்தில் பெரியார் அறிவுலகம் சீல் இருக்கும் தேதி 22.6.2026. தவெக ஆட்சியில் சீல் வைக்கப்பட்டுள்ளது. ஒரு வேளை திமுக ஆட்சியில் இந்த புத்தகம் வாங்கி இருந்தால், ஜூன் மாதம் வரை அந்த புத்தகம் எங்கே வைக்கப்பட்டிருந்தது?. கண்டிப்பாக நூலகத்தில் இல்லை. ஏனெனில் பெரியார் அறிவுலகம் இறுதி பணிகள் நடைபெறுவதை 31.5.2026 அன்று ஆய்வு செய்துள்ளார். அதே போல அமைச்சர் சம்பத் அவர்களும் ஜூன் 7 ஆம் தேதி பேட்டியில் இறுதி பணி நடப்பதாக கூறியுள்ளார். பணி நடைபெறும் போது புத்தகங்கள் அங்கே இருக்க வாய்ப்பில்லை.

20.7.2026 புத்தகங்கள் அடுக்கும் வேலை நடந்து வருவதாக விகடன் செய்தி வெளியிட்டுள்ளது. 22.6.2026 என்று அச்சிடப்பட்ட தேதியோடு இது ஒத்து போகிறது. எனவே தவெக ஆட்சிக்கு வந்த பின்பு தான் புத்தகங்கள் வந்துள்ளன. ஜூலையில் தான் அடுக்கப்பட்டுள்ளன. இதை விடுதலையும் உறுதி செய்கிறது.

22.8.2026 விடுதலை இதழில் 80 ஆயிரம் புத்தகங்கள் கொண்டு வரப்பட்டு தயார் நிலையில் உள்ளது என்றும் பெரியார் பிறந்த நாளில் திறக்கப்படும் என்று எதிர்பார்ப்பதாக அதிகாரிகள் கூறியுள்ளனர். ஆக புத்தகங்கள் வந்தது தவெக ஆட்சியில் என்பதை செய்திகள் காட்டுது. அதனால் தான் ராஜ்மோகன் அரசாணையை மட்டும் காண்பித்து கொள்முதல் தேதியை மறைக்கிறாரா?

ஒருவேளை திமுக ஆட்சியில் புத்தகங்கள் வாங்க ஆர்டர் கொடுத்திருந்தால், புத்தகம் வாங்கி சீல் வைத்த தவெக அரசு ஏன் அந்த புத்தகங்களை ஆய்வு செய்யவில்லை?. பல கோடி மதிப்புள்ள பரந்தூர் ஏர்போர்ட் முதல் திமுக ஆட்சியில் போட்ட எல்லா டெண்டர்களையும் ரத்து செய்த தவெக அரசு ஏன் புத்தக கொள்முதலை ரத்து செய்யவில்லை? மே மாதம் இறுதியில் ஆய்வு செய்த ஆதவ் கண்ணில் புத்தக கொள்முதல் ஊழல் கண்ணுக்கு தெரியவில்லையா? துறை அமைச்சரான ராஜ்மோகனுக்கும் கண்ணுக்கு தெரியவில்லையா? விஜய் திறந்து வைக்கும் போது கூட இந்த புத்தகங்கள் கண்ணுக்கு தெரியாமல் போனது எப்படி?

பெரியார் அறிவுலகம் திமுக காசில் கட்டியதா என்று credit க்கு மட்டும் திமுக காரணமல்ல என்று சொன்ன ராஜ்மோகன், புத்தக கொள்முதலை மட்டும் தி.மு.க. மீது மட்டும் சாட்டிவிட்டு escape ஆவது ஏன்?

இலக்கிய புத்தக தேர்வு குழுவில் பெருமாள் முருகனும் இருந்துள்ளார் என்ற தகவல் வருது. அப்போ அவர் சொன்ன புத்தகம் வாங்கவில்லை என்பதால் தான் குற்ற சாட்டை வைக்கிறாரா? தவெக ஆட்சிக்கு வந்த பின்பு புத்தக கொள்முதல் மாற்றப்பட்டதா? அல்லது அகல்விளக்கு பதிப்பகம் மட்டும் தவெக ஆட்சியில் கொள்முதல் செய்யப்பட்டதா?

ராஜ்மோகன் விளக்கம் கொடுப்பாரா?

யாசிர்

ஊடகவியலாளர்

பொய்மேல் பொய் பரப்பும் த.வெ.க. தற்குறிகள்!

தி.மு.கழக ஐ.டி. விங் தாக்கு!

சென்னை, நவ.7- பெரியார் அறிவுலகத்துக்கு புத்தகம் வாங்கியது தொடர்பாக பொய் மேல் பொய் பரப்பு கிறார்கள் த.வெ.க. தற்குறிகள் என்று உரிய ஆதாரங்களுடன் தி.மு. கழக ஐ.டி. விங் தகவல் வெளியிட்டுள்ளது.


தி.மு. கழக ஐ.டி. விங் வெளியிட்டுள்ள 'எக்ஸ்' தள பதிவு வருமாறு:-

ரெண்டே ரெண்டு பேருக்கு நடுவுல தான் போட்டியே, ஒன்னு தவுட்டு தற்குறிகள், இன்னொன்னு தரங்கெட்ட தற்குறிகள்! போட்டோ ஷாப்பில் ஏதோ கிண்டி எடுத்து வந்துள்ள தற்குறிகள் மண்டை மேல் உள்ள கொண்டையை மறப்பதைப் போல அட்ரெஸை கவனிக்க தவறி விட்டனர்.

நூலகத்தில் சீல் வைக்கப்பட்டதில் உள்ள அட்ரெஸ் மடிப்பாக்கம் என உள்ளது. ஆணை என இவர்கள் வெட்டி ஒட்டி போட்டுள்ளதில் அட்ரெஸ் கொடவாசல் என உள்ளது.

காசிமேடு மீனவர்கள் பிரச்சனை, சட்டம் ஒழுங்கு, எல்லாத்துக்கும் மேல நேற்று இரவு த.வெ.க.வுக்கு ஏற்பட்ட பின்னடைவை திசைதிருப்ப பொய் மேல் பொய் பரப்பி வருகின்றனர் தரங்கெட்ட தவெக தற்குறிகள்.

இவ்வாறு பதிவிடப்பட்டுள்ளது.



த.வெ.க. அரசின் அலட்சியத்தால் பரிதாபம்!

காசிமேடு மீனவர்களின் படகு புயலில் சிக்கி விபத்து: 9 பேர் பலி!

ஆந்திராவில் 7 பேர் சடலம் கரை ஒதுங்கியது! குடும்பத்தினர் கண்ணீர் – மீனவ கிராமம் சோகம்!

சென்னை, நவ. 7- சென்னை காசிமேட்டைச் சேர்ந்த மீனவர்கள் 9 பேர் முரசு புயலில் சிக்கி மாயமாகியுள்ளனர். ஆந்திர கடற்கரையில் ஒதுங்கிய 7 பேரின் சடலங்களில் 3 பேர் சென்னை காசிமேடு பகுதியை சேர்ந்த மீனவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது. சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து கடந்த 29ம் தேதி மீனவர்கள் பக்கிரிசாமி என்ற சூர்யா (49), குப்பன் (48), மோகன் (47), ராஜேஷ் (52), முருகன் (48), குப்புசாமி (58), விஜயகாந்த் (44), அரவிந்த் (40) மற்றும் கடலூரை சேர்ந்த நாராயணன் (57) ஆகிய 9 பேர் விசைப்படகில் மீன்பிடிக்க சென்றுள்ளனர். முரசு புயல் எச்சரிக்கை காரணமாக ஆந்திராவின் நிஜாம்பட்டினம் துறைமுகத்தில் படகை நிறுத்தியிருந்த நிலையில், நவம்பர் 3ம் தேதி ராமாயப்பட்டினம் நோக்கி அவர்கள் புறப்பட்டதாக கூறப்படுகிறது.

பின்னர் புயலில் சிக்கி படகு நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி உள்ளது. தொடர்ந்து மீனவர்களை தேடும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இந்நிலையில் ஆந்திராவின் பிரகாசம் மாவட்டம், கொத்தப்பட்டினம், பள்ளிபாலம் கடற்கரையில் நேற்று படகு கவிழ்ந்த நிலையில், கண்டு பிடிக்கப்பட்டது. இந்நிலையில் நான்கு உடல்கள் கரை ஒதுங்கியுள்ளன. சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் காசிமேடு மீனவர்களாக இருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகித்தனர். இதற்கிடையில் மன்னூரில் ஒரு சடலமும், குண்டம்மல்லம் பகுதியில் ஒரு சடலமும் கரை ஒதுங்கியுள்ளன. இதுவரை 7 சடலங்கள் மீட்கப்பட்ட நிலையில் 3 பேரின் அடையாளம் மட்டும் தெரிந்தது.

மேலும் மீனவர்களை தேடும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. புயல் ஏற்படும்போது உள்ளூர் படகுகள் துறைமுகத்திற்கு செல்லும், ஆனால் சென்னை மற்றும் கடலூர் மீனவர்கள் அர்னாப் புயல் கரையை கடந்த பிறகு இவர்கள் புறப்பட்டு கடலுக்கு சென்று முரசு புயலில் சிக்கி இருக்கலாம் என கருதப்படுகிறது. இருப்பினும் மீனவர்கள் குடும்பத்தினர் வந்து சடலத்தை அடையாளம் கண்டு உறுதிப்படுத்தினால் மட்டுமே கடலில் அடித்து வரப்பட்டவர்கள் யார் என்பது உறுதியாக கூற முடியும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி மீனவர்களின் குடும்பத்தினருக்கு தகவல் அளித்து அவர்களது குடும்பத்தினரை அதிகாரிகள் அழைத்து வந்தனர். முதற்கட்டமாக மோகன் என்பவரது சடலம் மட்டும் அடையாளம் காணப்பட்டுள்ளது. மற்ற உடல்கள் சிதைந்த நிலையில் உள்ளதால், அடையாளம் காணும் பணிகள் தீவிரமாக நடந்தது. பின்னர், 3 மீனவர்களின் உடல் அடையாளம் காணப்பட்டது, அவர்கள் காசிமேடு இந்திரா நகரை சேர்ந்த மோகன், விஜயகாந்த், முருகன் என்று கூறப்படுகிறது. மேலும் காணாமல் போன மற்ற மீனவர்களை தேடும் பணியில் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அதே போல், உடல்களை அடையாளம் கண்டு சட்டப் பூர்வ நடவடிக்கைகளுக்கு பிறகு தமிழகத்துக்கு கொண்டுவர தமிழக மீன் வளத்துறை அதிகாரிகள் ஆந்திராவுக்கு வந்துள்ளனர்.

இதுதொடர்பாக காசிமேடு மீன்பிடி துறைமுக காவல் நிலையத்திலும், மீன்வளத்துறை அலுவலகத்திலும் காணாமல் போன மீனவர்களின் குடும்பத்தினர் புகார் அளித்தனர். ஆனால் இது வரை காணாமல் போன மீனவர்கள் பற்றி எந்த தகவலும் கிடைக்கவில்லை என குடும்பத்தினர் வேதனை தெரிவித்தனர். மூன்று நாட்களாகியும் தற்போது வரை அவர்கள் இருக்கிறார்களா இல்லையா என தெரியாமல், தங்களால் நிம்மதியாக இருக்க முடியவில்லை என்றும், அதிகாரிகள் அலட்சியமாக செயல்படுவதாகவும் குற்றம்சாட்டினர். இங்கு இருக்கும் எந்த மீனவ சங்கத்தினரும் தங்களை சந்திக்கவில்லை, மீன்வளத்துறை அமைச்சர் கூட தங்களை வந்து தற்போது வரை சந்திக்கவில்லை எனக் கூறி நேற்று திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து தகவல் அறிந்து ஆர்.கே.நகர் சட்ட மன்ற உறுப்பினரும் நிதி அமைச்சருமான மரியவில்சன் காசிமேடு பகுதிக்கு வந்தார். அப்போது காணாமல் போன மீனவர்களின் உறவினர்கள் குடும்பத்தினர்கள் அழுது மறியலில் ஈடுபட்டிருந்தனர். அவர்களிடம் அமைச்சர் ஆறுதல் கூறினார்.

இதற்கிடையில் ஆந்திராவில் சடலங்கள் ஒதுங்கிய தகவல் அறிந்ததும் குடும்பத்தினர் கண்ணீர் விட்டு கதறினர். மீனவ கிராமமே சோகத்தில் மூழ்கியது.

வடகிழக்கு பருவமழை தீவிரம்

8 மாவட்டங்களில் கனமழை!

13ம் தேதி புதிய புயல் சின்னம் உருவாக வாய்ப்பு!

சென்னை, நவ. 7- தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து வரும் நிலையில், தென் மாவட்டங்கள் உட்பட 7 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை காரணமாக கடந்த சில நாட்களாக பல்வேறு மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. அரபிக்கடல் பகுதியில் நிலவும் வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதையின் காரணமாக மழைப் பொழிவு தொடர்கிறது.

இதன்படி, தேனி, திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி, ராமநாதபுரம், புதுக்கோட்டை, சிவகங்கை ஆகிய 7 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் மணிக்கு 30 முதல் 40 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசுவதுடன் கனமழையும் பெய்யக்கூடும். மற்ற மாவட்டங்களிலும் பரவலாக மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இடி, மின்னலுடன் மிதமான மழை பெய்யக்கூடும்.

மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. தீபாவளி நாளான நவ.8ம் தேதி தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்டங்களில் பலத்த மழை பெய்யக்கூடும். நவ.9ம் தேதி தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், ராமநாதபுரம் மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தென்கிழக்கு வங்கக்கடலில் நவம்பர் 13ம் தேதி புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளது. இது நவம்பர் 15ம் தேதி வலுப்பெறக்கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் கோவை மாவட்டம் துடியலூரில் அதிகபட்சமாக 100 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. நீலகிரி கெங்கரையில் 90 மி.மீ. மழையும், செங்கம், மேட்டுப்பாளையம், பள்ளிப்பட்டு, கல்புதூர் ஆகிய இடங்களில் தலா 80 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது. தொடர்ந்து மழை பெய்ய வாய்ப்புள்ளதால் பொதுமக்கள் வானிலை அறிவிப்புகளை கவனித்து பயணங்களைத் திட்டமிடுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.



தாம்பரம் மாநகர தி.மு.க சார்பில் மேற்கு தாம்பரத்தில் அமைந்துள்ள ராஜகோபலா திருமண மண்டபத்தில் கழக தோழர்கள் மற்றும் ஆண்,பெண் ஆட்டோ ஓட்டுநர்கள் 2000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் மண்டல தலைவர் டி.காமராஜ் ஏற்பாட்டில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா புத்தாடை மற்றும் இனிப்பு வெடி வழங்கினார். உடன் மேயர் க.வசந்தகுமாரி, 5,வது மண்டல குழு தலைவரும், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் எஸ். இந்திரன், மாநகராட்சி கொறடா. டி.ஆர்.கோபி, கி.வேலுமணி, எஸ்.ஜி.கருணாகரன், ஜா.ரவிகுமார், ரமணி ஆதிமுலம், பி.ஜோதி குமார், சி.சுரேஷ், பெரியநாயகம், இரா.செல்வகுமார், ஆர்.செல்வகுமார், எஸ்.கார்த்திக், வி.கார்த்திக், இரா.விஜயகுமார் மற்றும் மாநகர, பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெரும் திரளாக பங்கேற்றனர்.

ஐந்தாயிரம் கோடி ரூபாய் நிதி மோசடி வழக்கில், த.வெ.க. ஆட்சியாளர்களுக்கு நெருக்கமான

பிரேம்குமாருக்கு சொந்தமான 103 கோடி ரூபாய் சொத்துகள் முடக்கம்!

அமலாக்கத்துறை அதிரடி நடவடிக்கை!

சென்னை, நவ. 7- பொதுமக்கள் முதலீடு செய்த டெபாசிட் தொகைகளுக்கு அதிக வட்டி தருவதாகக் கூறி ஏமாற்றியதாக, BLM ஹவுசிங் மற்றும் கிரெடிட் சொசைட்டி தலைவர் பிரேம்குமார் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. காஞ்சிபுரத்தில் 300 ஏக்கர் நிலம் வாங்கியது, ஹோட்டல்கள், ரிசார்ட்டுகள், திரையரங்குகள் உள்ளிட்ட தொழில்களில் முதலீடு செய்தது குறித்து பிரேம்குமாரை சென்னையில் வைத்து கேரள போலீசார் அண்மையில் கைது செய்தனர். பணபரிமாற்றம் தொடர்பாக, பிரேம்குமார் மீது அமலாக்கத்துறையும் வழக்குப்பதிவு செய்து விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளது.

இதையடுத்து, எர்ணாகுளம், கோழிக்கோடு, திருச்சூர், திருவனந்தபுரம், மூணார் உள்ளிட்ட பிரேம்குமார் தொடர்புடைய பல்வேறு இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் தொடர் சோதனை நடத்தினர். இதேபோன்று, சென்னை கோயம்பேட்டில் YBM டிரான்ஸ்போர்ட் நிறுவனத்திலும் அமலாக்கத் துறை சோதனை நடத்தி பல்வேறு ஆவணங்களை கைப்பற்றியது. பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில், மோசடி செய்த பணத்தை 320 வங்கி கணக்குகளுக்கு பிரேம்குமார் மடைமாற்றம் செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அமலாக்கத்துறை கூறியுள்ளது.

மேலும், இந்த சோதனையில் பிரேம்குமாருக்கு சொந்தமான 7 கோடி ரூபாய் மதிப்புள்ள 8 சொகுசு கார்கள், 9 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 7,400 கிராம் தங்க நகைகள், 80 கோடி ரூபாய் மதிப்புள்ள பங்குகள், 5 கோடி ரூபாய் மதிப்புள்ள அசையா சொத்துகள் மற்றும் ஒரு கோடியே 86 லட்சம் ரூபாய் வங்கி இருப்புத் தொகைகள் முடக்கப்பட்டுள்ளதாகவும் அமலாக்கத்துறை குறிப்பிட்டுள்ளது.

த.வெ.க. ஆட்சியாளர்களுக்கு நெருக்கமானவராக கூறப்படும் பிரேம்குமார் கடந்த ஜூலை ஆண்டு முதலமைச்சர் விஜய்யைச் சந்தித்த புகைப்படமும் வெளியானது. மேலும், பிரேம்குமாருக்குச் சொந்தமான நிறுவனத்தின் பேருந்துகள் தவெகவின் பல்வேறு நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.



காஞ்சிபுரம் மாநகராட்சியில் 18 வது வார்டு குப்புசாமி முதலியார் தொடக்கப்பள்ளி மற்றும்.பிள்ளையார் பாளையம் அரசு தொடக்கப் பள்ளியில் 18வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி மல்லிகா ராமகிருஷ்ணன் 14 வது வார்டு மாமன்ற உறுப்பினர் குமரவேல் ஆகியோர் ஏற்பாட்டில் மாணவ மாணவியருக்கு புத்தாடை மற்றும் இனிப்பு வழங்கினர். உடன் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி. எஸ். ராமகிருஷ்ணன், மாமன்ற உறுப்பினர் குழந்தைவேலு தலைமை ஆசிரியர் – ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.